

நகர் ஊரமைப்பு துறை

அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம்

புத்தூர் ஊராட்சி / கிராமம்

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம் / ஊராட்சி ஒன்றியம், புத்தூர் ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள் :9/7A1, 7A2, 7A3, 7B1, 7B2, 7B3, 7B4, 7B5, 8A, 8B1 & 9/8B2 – ஆகியவற்றில் அமையும் குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்பம் எண்	:	GE0A7388
அளவு	:	1 : 400
கோப்பு எண்	:	VLR / GE0A7388 / 129 - 2023

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு	:	1707.00 ச.மீ. (அ) 0.72 ஏக்கர்
கோரிய மனைகள்	:	4
ஒதுக்கிய மனைகள்	:	4
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையிலுள்ள சாலை	:	

பொது ஒதுக்கீடு :

இம்மனை உட்பிரிவிற்க்கு அரசாணை விதிகளின்படி பொது ஒதுக்கீடு மற்றும் திறந்தவெளியிடம் பொருந்தாது.

நிபந்தனைகள் :

1. இம்மனைஉப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லை என்றும் தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

3. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

4. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" x 4'0" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

5. அரசாணை எண்.181, நாள்.09.12.2020–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை தவறாமல் அனுசரிக்கப்பட வேண்டும்.

6. உத்தேச மனையிடம் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட பட்டா அல்லது பஞ்சமி நிலம் ஆகிய வகைப்பாட்டில் ஒதுக்கப்பட்டிருப்பின் தங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி இத்துறையால் ரத்து செய்யப்படும்.

7. மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதலால் நீர்நிலைகள் (வாய்க்கால், ஆறு, ஏரி) ஆகியவை பாதிக்கும் அம்சங்கள் ஏதும் அமையுமாயின் வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இத்துறையால் ரத்து செய்யப்படும்.

8. மனை உட்பிரிவானது மாநில நெடுஞ்சாலையை ஒட்டி அமைவதால் சாலையிலிருந்து 7.0 மீ இடைவெளி விட்டு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

9.இம்மனை உட்பிரிவு ஒப்புதலானது மனுதாரரின் கோரிக்கையின் பெயரில் அவ்வாறு வழங்கப்படுகிறது. இதில் அமையும் மனைகள் உட்பிரிவு ஏதும் செய்யப்பட கூடாது என இதன் மூலம் நிபந்தனையிடப்படுகிறது.

10. The Necessary Charges to be collected as per G.O.Ms.No.79, Housing & Urban Development (UD4(3) Department, Dt. 04.05.2017.

ம. வ. / மா. ந. ஊ. அ. (வே.மா.) எண் : 109 / 2023

உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (கூ.பொ.),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

Signature Not Verified
Signed by Joint Director
Location:Vellore
Date:2023.12.30 21:07:59